சுற்றுநிருபம் - 02/2021

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாண சபை
2021.05.05

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் உட்பட அனைத்து இயக்குநர்சபை உறுப்பினர்களுக்கும் / பொதுமுகாமையாளர்களுக்கும்,

## கொவிட் - 19 வைரஸ் நிலவும் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் சேவைகளை முன்னெடுத்துச் செல்லல்.

கொவிட் - 19 வைரஸ் நிலவும் காலகட்டத்தில் வழமையான நாளாந்த நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களில் அல்லது அதற்கு சமனாக சேவை வழங்கும் நிலையங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிகாட்டு நெறிகளை கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. அலுவலகத்திற்கு பிரவேசிப்பதற்கு முன்னர் சுத்தப்படுத்திக்கொள்ளும் பொருட்டு சவர்க்காரம் மற்றும் கழுவும் வசதிகளை வழங்குதல் வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தின் செலவில் பணியாளருக்கான முகக்கவசங்கள் சுகாதார முறையில் கழுவும் துப்பரவாக்கிப் பொருட்கள், கிருமிநாசினிகள் மற்றும் Sanitizer என்பவற்றை வழங்கும் பொருட்டு ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

2. உத்தியோகத்தர்களின் ஆடை மற்றும் ஏனைய அணிகலன்கள் அவர்களை கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாக்க முடியும் என்பதால் இக்காலப்பகுதியில் ஒழுக்கமான எளிமையான ஆடைகளை அணிந்து அலுவலக வளாகத்தினுள் வருவதற்கும் அத்தியாவசியமற்ற அணிகலன்களை அணியாதிருப்பதற்கும் உத்தியோகத்தர்கள் செயற்படல் வேண்டும்.

3. கொவிட் - 19 வைரஸ் தனிமைப்படுத்தல் பிரதேசங்களுக்கான பொருட்கள் விநியோக நடவடிக்கையின் போது கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் பாதுகாப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை வலுவாக கடைப்பிடிக்க வேண்டும்.

எனவே கூட்டுறவுச் சங்கங்கள் தமது பிரதேச மக்களுக்கு இடையறாது சேவை வழங்கக்கூடிய வகையிலும், சூழ்நிலைக்கமைய கடமையாற்றக்கூடிய வகையிலும் உரிய பாதுகாப்பு நடவடிக்கையுடன் சேவை வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

M.N

மு. நந்தகோபாலன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவச் சங்கங்களின் பதிவாளரும்.
வடக்கு மாகாண சபை .

மு.நந்தகோபாலன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாண சபை

பிரதி - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - யாழ்ப்பாணம் /கிளிநொச்சி/ முல்லைத்தீவு / வவுனியா/ மன்னார். - உரிய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்காக.